**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

CC No. : 291/2025

Name : Viswanathan

P.W. : 6

Father Name :

Village :

Taluk : Madathukulam

Occupation :

Age : /2026

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **20.08.2026**

**2 ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**1 ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் குப்பம்பாளையத்தில் வசிக்கிறேன். விவசாயம் செய்கிறேன். சுமார் 6 மாதங்களுக்கு முன்பு குப்பம்பாளையம் அரசு பள்ளியில் திருட்டு போனது சம்மந்தமாக சாட்சி வேண்டும் என்று வயலுக்கு சென்று கொண்டிருந்த போது பஞ்சாயத்து அலுவலகம் அருகே உள்ள பேக்கரியில் வைத்து போலீசார் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். எதற்கு கையெழுத்து போட்டேன் என்று தெரியவில்லை. நான் ஒரே ஒரு கையெழுத்து தான் போட்டேன் என்னுடன் மணி என்பவரும் கையெழுத்து போட்டார். (சாட்சியிடம் எதிரிகளின் ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் கைப்பற்றுதல் மகஜர் காட்டி கேட்ட போது அதில் இருந்த அவருடைய நான்கு கையெழுத்துக்களும் அவருடையதுதான் என்று ஒப்புக்கொண்டார்) ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 1 வது

கையெழுத்து என்னுடையதுதான். **1ம் எதிரி அன்பரசனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் எதிரி கணேசன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **முதலாவது கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. இரண்டாவது கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 1வது கையெழுத்து அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) அன்பரசன் மற்றும் கணேசன் ஆகியோர் எந்த ஊரைச் சேர்ந்தவர்கள் என்றால் அவர்கள் குப்பம்பாளையத்தைச் சேர்ந்தவர்கள் தான். ஆஜர் எதிரியை தெரியும் எங்கள் ஊரைச் சேர்ந்தவர். நான் போலீசார் விசாரணையில் கடந்த 28.07.2025 ம் தேதி காலை 06.00 மணி அளவில் நானும், மணியும் சொந்தவேலையாக கொழுமம் கலையரங்கம் வழியே சென்று கொண்டிரக்கும் போது எதிரிகள் அன்பரசு மற்றும் கணேசன் ஆகிய இருவரையும்போலீசார் எங்கள் ஊரில் உள்ள அரசுப் பள்ளியில் நடந்த திருட்டு சம்மந்தமாக விசாரித்த போது அவர்கள் இருவரும் தானாக முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றும் பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 மற்றும் 2 எதிரிகள் தானாக முன் வந்து அவரது வீட்டின் முன்பு lenova laptop –2 எண்ணிக்கை மற்றும் சுமார் 72.5 செ.மீ நிளமுள்ள இரும்பு

கம்பி – 1 மற்றும் கருப்பு நிறம் கொண்டு acer tab –1, கறுப்பு நிறம் கொண்ட தமிழக அரசின் வண்ணத் தொலைகாட்சி பெட்டி –1 யை போலீசார் கைப்பற்றிய போது சாட்சியாக இருந்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை இல்லை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.08.20 19:02:13 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்

**DEPOSITION OF WITNESS**

**(Chapter XXV of Bharatiya Nagarik Suraksha Sanhita)**

**IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, MADATHUKULAM**

| | |
|---|---|
| CC No. | : 291/2025 |
| Name | : Mani |
| P.W. | : 7 |
| Father Name | : |
| Village | : |
| Taluk | : Madathukulam |
| Occupation | : |
| Age | : /2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of

**20.08.2026**

**2 ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜர்**

**1ம் எதிரி நீதிமன்றத்தில் ஆஜரில்லை 355 BNSS ன் படி மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது.**

**முதல் விசாரணை**

நான் கொழுமத்தில் வசிக்கிறேன். கூலி வேலை செய்கிறேன். சுமார் 1 வருடத்திற்கு முன்பு குப்பம்பாளையம் அரசு பள்ளியில் திருட்டு போனது சம்மந்தமாக சாட்சி வேண்டும் என்று டீ சாப்பிட சென்ற போது பஞ்சாயத்து அலுவலகம் அருகே உள்ள பேக்கரியில் வைத்து போலீசார் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். எதற்கு கையெழுத்து போட்டேன் என்று தெரியவில்லை. என்னுடன் விஸ்வநாதன் என்பவரும் கையெழுத்து போட்டார். ஒப்புதல் வாக்குமூலங்களில் உள்ள 2வது கையெழுத்து என்னுடையதுதான். **1ம் எதிரி அன்பரசனின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது. 2ம் எதிரி கணேசன் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜர்களில் உள்ள 1வது கையெழுத்து என்னுடையதுதான். **முதலாவது கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2வது கையெழுத்து அ.சா.ஆ.10 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது. இரண்டாவது கைப்பற்றுதல் மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து அ.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**சாட்சி அரசு தரப்பிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காததால் பிறழ் சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பில் அனுமதி கோரப்பட்டது. அனுமதிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்கு விசாரணை**

(1) நான் போலீசார் விசாரணையில் கடந்த 28.07.2025 ம் தேதி காலை 06.00 மணி அளவில் நானும், விஸ்வநாதனும் சொந்தவேலையாக கொழுமம் கலையரங்கம் வழியே சென்று கொண்டிரக்கும் போது எதிரிகள் அன்பரசு மற்றும் கணேசன் ஆகிய இருவரையும்போலீசார் எங்கள் ஊரில் உள்ள அரசுப் பள்ளியில் நடந்த திருட்டு சம்மந்தமாக விசாரித்த போது அவர்கள் இருவரும் தானாக முன் வந்து அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சாட்சி கையெழுத்து செய்தேன் என்றும் பின்னர் ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் 1 மற்றும் 2 எதிரிகள் தானாக முன் வந்து அவரது வீட்டின் முன்பு lenova laptop –2 எண்ணிக்கை மற்றும் சுமார் 72.5 செ.மீ நிளமுள்ள இரும்பு கம்பி – 1 மற்றும் கருப்பு நிறம் கொண்டு acer tab –1, கறுப்பு நிறம் கொண்ட தமிழக அரசின் வண்ணத் தொலைகாட்சி பெட்டி –1 யை போலீசார் கைப்பற்றிய போது சாட்சியாக இருந்துவிட்டு தற்போது எதிரிகளை காப்பாற்ற வேண்டி பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை**

**மறு விசாரணை இல்லை.**

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது..

DHEENADHAYALAN M

Digitally signed by DHEENADHAYALAN M
Date: 2026.08.20 19:02:36 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
மடத்துக்குளம்